உ
சிவமயம்

# கூட்டு வழிபாட்டுப் பாமாலை




வெளியீடு:

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

07 - 12 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

''பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடியாடி நைந்துருகி நெக்கு நெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி''

என்பது மணிவாசகப் பெருமானின் அருள்வாக்கு. இறையருள் உள்ளத்தில் நிலைபெறுவதற்கு வழிகாட்டுவன அருட்பாடல்களே. அதுவும் தனித்துநின்று பாடுவதிலும் பார்க்கக் கூடிநின்று பாடுவது தெய்வ உணர்வைப் பெருக்குவதாகும். மக்களிடையே தெய்வபக்தி பரவவும், கட்டுப்பாடு வளரவும், ஒற்றுமை ஓங்கவும் கூட்டு வழிபாடு மிகவும் அவசியமாகும். இந்நாட்களில் இது பல இடங்களில் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இந் நெறியை அனைவரும் பின்பற்றி திருவாய் பொலியத் திருப்பாடல்களைப் பாடிப்பாடித் திருக்கோயில்களுக்கு அருள்வளமூட்ட வேண்டும். மழை வளத்தினால் மண் குளிரும்; மனவளத்தினால் சமூகம் குளிரும்; இசை வளத்தினால் இறைவன் குளிர்வான்; எம்மையும் குளிர்விப்பான். ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் பெருமான் அர்த்தநாரீஸ்வரன், அம்பிகையும் பாடற்பணிக்கு முன்னிடமளித்து முத்துமாலையைக் குமரகுருபர சுவாமிகளுக்கு வழங்கியதை எல்லோரும் அறிவர். இதனை முன்னிட்டே சைவமக்கள் பண்ணிசைக்கும் பஜனை நிகழ்ச்சிக்கும் சிறப்பிடம் கொடுத்துப் போற்றுகின்றனர்.

எங்கள் தேவஸ்தானம் காலத்துக்குக் காலம் அருட்பாடல் நூல்கள் பலவற்றை வெளியிட்டபோதும் கூட்டுப் பிரார்த்தனை நூலாக இதுவரை ஐந்து பதிப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும் அடியார்களின் வேண்டுகோளை ஏற்று இந் நூல் ஆறாவது வெளியீடாக வெளிவருகிறது. நாள் தோறும் எங்கள் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சி நடைபெறுகிறது. அம்பாள் அடியார்கள் அனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இவ்வாறு பிரார்த்தனைபண்ணி ராகுதோஷம், கிரக தோஷம், நோய், பகை, ஆகியவற்றிலிருந்து நீங்கி சர்வ மங்கல வாழ்வு வாழ்ந்து சுகம் பெறுதற்கு இப் பாடல்கள் வழிகாட்ட வேண்டுமென்று நாள்தோறும் பிரார்த்திக் கின்றோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்
**நிர்வாகசபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பழை.

*25-11-1993*
*(ஆறாம் பதிப்பு)*

* * *

உ

*அம்மா, தயாபரி, தாயே துர்க்கா;*
*உன் திருவடிகளே சரணம்.*

மந்திர ஜெபமோ, ஆசனமுறையோ, நியாசாதிகளோ எனக்குத் தெரியாது. இது சத்தியம் அம்மா. ஆனால் நான் உன்னைச் சார்ந்து வாழுகின்றேன். எனக்கு வேறு துணை இல்லை. எவ்வளவுதான் பிழைகள் செய்திருந்தாலும் உனக்கே உரிய கருணையினால் என்னைக் காப்பாற்ற வேண்டும். என் உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்திவை. எனக்கு எஞ்சியுள்ள வாழ்நாள் உன்னை வழிபடுவதில் முற் றாக நிலைக்கட்டும். என்னைப்போல் தவித்துக் கொண்டி ருக்கும் ஆயிரம், ஆயிரம் மக்களை கரையேற்றி இரட்சிப்பா யாக; என் தாயே, உன் திருவடிகளே சரணம், சரணம். இக் கலியுகத்தில் துன்பங்களைப் போக்கி மக்களுக்கு அவர்கள் வேண்டும் நலமனைத்தும் அளித்துக் காப்பவள் நீயே தான்! உன் புகழ் பற்றி நூல்கள் உறுதி கூறுகின்றன. அதனை நாமும் மேற் கொண்டு வாழ்வும் வளமும், அரு ளும் பொருளும், அமைதியும் ஆனந்தமும் பெறக் கருணை பாலிப்பாயாக.

**அம்பாள் அடியார்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமுறைகள்

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்

தோடுடைய செவி யன்விடை யேறிஓர்
தூவெண் மதி சூடிக்
காடுடைய சுட லைப்பொடி பூசிஎன்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிர மாபுரம் மேவிய
பெம்மான் இவ னன்றே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

கூற்றாயின வாறு விலக் ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே.

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துஉன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்துஉன்னைப் 'போற்றிசயசய
போற்றி' என்னும்
கைதான் நெகிழ விடேன்உடையாய்என்னைக்
கண்டு கொள்ளே.

## திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடு அரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## சேந்தனார் திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனிஎல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக்கு அருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலர் திருமந்திரம்

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவன் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவன் அன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை
அவன்அன்றி ஊர்புகு மாறு அறியேனே.

## காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி

பிறந்துமொழி பயின்றபின் எல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?

## சேக்கிழார் பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## அருணகிரிநாதர் திருப்புகழ்

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணம்நாறும்
மார்தங்கு தாரைதந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்தவேதத்தின் பொருளோனே
நான்என்று மார்தட்டும் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாய நம ஓம்

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
நமசிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவாய நம ஓம்
சிவாய சிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
அரஹர சிவ சிவ சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவாய நம ஓம்.

## சரணம்

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுக சரணம் சரணம்
சிலைமலை யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவரு மொருபரை சரணம் சரணம்
உமைசிவை அம்பிகை சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி காமாட்சி சுமங்கலி

அரகர சங்கரி நாரிம னோகரி
ஆதிபு ராந்தக அம்பிகையே
முரகரி மாதவ சோதரி மாதவி
மோகவி லாசினி முக்கனியே
மரகத ரூபிணி மாதும னோன்மணி
மகபதி பாணிப வாணியளே!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

திருவருள் எங்கணும் தேக்கிட மங்கலச்
சீரறம் செய்யன்ன பூரணியே!
உருவருள் கொண்டுல குய்ந்திட மாதவம்
ஓம்பிடும் காஞ்சி யுமையவளே!
குருவருள் பொங்கிடக் குஞ்சித பாதமென்
கூப்பிய நெஞ்சினில் கோலிடுவாய்!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

அருளுரு நெஞ்சினில் அம்புயக் கண்களில்
ஆட்சிபு ரிந்திடும் அன்னையளே!
பொருளுறு புன்னகை பொங்கிட வந்தருள்
பூங்கணை ஏந்திய பொன்மகளே!
மருவறு சேவடி வாழ்த்தி வணங்கிட
வல்லமை தந்தருள் வைணவியே!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதன தந்தன தானன தந்தன
தாந்திடு தோமெனத் தாண்டவமே;
கனதனம் பம்பிடக் காற்சிலம் போங்கிடக்
காந்த கனன்றிடும் காளியளே
மனமெனும் மன்றில மர்ந்தனள் ஊக்கிடும்
மந்திர தந்திர மாமணியே
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

செகமதில் காணுமெச் சந்நிதி யாயினும்
தேவியுன் ரூபமென் சிந்தனையே!
முகமதில் சந்திர பிம்பமெ னும்படி
மோகனப் புன்னகை பூப்பவளே!
இகமதில் சாந்தியும் இல்லற மேன்மையும்
ஈந்திட வந்தருள் ஈகையளே!
ஜெயஜெய பங்கய குங்கும மஞ்சள்
இலங்குசு மங்கலி காமாட்சி!

## அபிராமி அந்தாதி

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலினி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங் குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்குஒரு தீங்கில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேவி தோத்திரம்

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயு மானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே. 1

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே. 2

செம்மை யானவள் துர்க்கா ஜெயமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே. 3

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே. 5

குருவு மானவள் துர்க்கா குழந்தை ஆனவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திரிசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே 6

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே 7

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர ககன துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான துர்க்கை அம்மா

கந்தவீர மாகாளி கமல மங்கலை
கருணையான வடிவழகி கனிந்து நின்றனை
விந்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றி கண்டனை
மந்தமான புத்தியோட்டி மணமும் தந்தனை
மலரில்வேதன் உன்னைப்பாட மயக்கம் தீர்த்தனை
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய். 1

நந்தவீர மாகாளி நயன மாலினி
நம்பிவந்த எம்மிடையே நலனும் காட்டுவாய்
இந்தவாழ்வில் உன்னையன்றி இங்கு யாருளார்
இன்றுநல்ல காலைவந்து இனிமை கூட்டுவாய்
மந்தையாடு போலவாழ்வில் மயங்கி நில்லாமல்
முத்தியோடு செல்வபோகம் முழுதும் நாட்டுவாய்
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய். 2

பொங்குவீர மாகாளி பொய்மை தீர்மணி
பொறுமையோடு பெருமையாகிப் பொருளும்கூட்டினாய்
எந்தையான சிவனைத்தூது எடுத்து அனுப்பினாய்
எழிலியாகி வண்ணமாகி என்னுள் ஆடினாய்
பந்தணைந்த விரலிநீயும் பகைமை என்றதும்
பரந்துவந்து படைகளோட்டிப் பசுமை காட்டினாய்
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வழிக்க என்றும் தங்குவாய். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தைவீர மாகாளி விரைந்து வந்திடின்
சொந்தநோயும் வந்தநோயும் தொலைவில் ஓடிடும்
எந்தமாயம் எம்மைத்தேடி வந்த போதிலும்
என்னையீன்ற தாய்நினைப்பில் எரிந்து போய்விடும்
சிந்தைவாழும் உந்தன்மஞ்சள் சிறிது பூசிடின்
கந்தனோடு கரியன்நீல கண்டன் காணலாம்
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய். 4

ஆதிசக்தி சோதிசக்தி ஆளவந்த சக்தியே
ஆகமங்கள் ஆனசக்தி ஆத்மசோதி சக்தியே
நீதிசக்தி நித்தியசக்தி நீறுபூசும் சக்தியே
நீலிசக்தி நிருத்தசக்தி நீலமேனி சக்தியே
காதிசக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே
காளிசக்தி காயசக்தி காட்சிதந்த சக்தியே
வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே
சூரசக்தி சூலிசக்தி சூழும்சக்தி சக்தியே. 5

## சரணம் சரணம்

துர்க்கா சரணம் சரணம் தாயே
துர்க்கா சரணம் சரணம்
தேவி சரணம் சரணம் தாயே
தேவி சரணம் சரணம்
அம்மா சரணம் சரணம் தாயே
அம்மா சரணம் சரணம்
ஆத்தாள் சரணம் சரணம் தாயே
ஆத்தாள் சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

# துணையாக வருவாய்

பல்லவி

உன்னுடைய பார்வையொன்றே உறுதுணையாய்வருகுதம்மா
கும்மிருட்டுப் பாதையிலும் பேரொளியாய்த் தெரியுதம்மா.

அனுபல்லவி

என்னுடைய ஆட்டமெல்லாம் நீஅமைத்த மேடையிலே
இசைவதுவும் அசைவதுவும்நின் கடைக்கண் சாடையிலே.

சரணம்

சிற்றிடையில் சிவந்தபட்டு திருக்கரத்தில் திரிசூலம்
நெற்றியினில் செந்தூரம் நீள்விழியில் கருணைமழை
தெல்லிநகர்த் துர்க்கைஅம்மா உன்னழகைப் பார்ப்பதற்கு
என்முகத்தில் அமைந்திருக்கும் இருவிழியால் இயன்றிடுமோ

சிங்கத்திலே நீவந்து சிறியேமைக் காத்திடுவாய்
எங்கள்பல குறையனைத்தும் ஈன்றவளே நீயறிவாய்
சிறியேங்கள் அழைத்தகுரல் திருச்செவியில் ஏற்றருள்வாய்
அறிவேதும் இல்லாதேம் அன்புமொழி கேளுமம்மா.

அம்பிகையே உலகீன்ற ஆரணியே காரணியே
செம்பவள மேனியளே சிவக்கொழுந்தே வந்தருள்வாய்
அணுவாகி உயிராகி ஐம்பூதப் பொருளாகி
துணையாகி எமைக்காக்கும் துர்க்கைஅம்மா வந்தருள்வாய்.

சுற்றிநிற்கும் உலகமெல்லாம் துர்க்கைஎன்று சொல்லுதம்மா
சூழ்ந்திருக்கும் உயிர்களெல்லாம் துதிக்குதம்மா உன்புகழை
வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் வணங்கிடுவேன் உன்னடியை
வரஇருக்கும் பிறவியிலும் வாழ்த்திடுவேன் உன்னருளை.

கேட்டவரந் தந்திடுவாய் கேதார நாயகியே
சூட்டுமலர்த் தாள்சரணம் சுந்தரியே சரணமம்மா
சர்க்கரையாய் முக்கனியாய்த் தமியேங்கள் மனத்தினிக்கும்
துர்க்கா மகேஸ்வரியே சரணமலர் சரணமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் கருணை வழிய வேண்டும்

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாடவேண்டும்
நவநவமாய் வடிவெடுக்கும் மாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
பண்ணமைக்கும் நாவுனையே பாடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்.

கவலைகளைத் தீர்த்துவிடும் காமேஸ்வரி
காரிருளில் தீச்சுடரே ஜோதீஸ்வரி
நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலே திருநாமம் வழியவேண்டும்
துன்பமெல்லாம் போக்கிவிடும் துர்க்கேஸ்வரி
தொழுதகைக்கு வளமளிக்கும் ஞானேஸ்வரி
கற்றதெல்லா மேன்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வழியவேண்டும்.

பார்வையிலே பரிமளிக்கும் பரமேஸ்வரி
பக்தர்களின் துதிசுமக்கும் கமலேஸ்வரி
சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும்
தொல்லைஇந்த வாழ்வைவிட்டு ஓடவேண்டும்
இன்பமான அமைதிஎங்கு மோங்கவேண்டும்
இதயமெல்லாம் ஈசன்கோயி லாகவேண்டும்
மண்வளமும் மனவளமும் பெருகவேண்டும்
மாநிலத்தில் உன்கருணை வழியவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

( பண் : நாதநாமக்கிரியை )

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
நஹநஹ தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 1

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தன தன தான
தாண்டவ நடன ஈச்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 2

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர்ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊறறு தாயே
ஊர்த்துவ யாயே ஊர்ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 4

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 5

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 7

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரணி சந்த்ர கண்டினியே
ஜெயஜெய கூஷ்மாண் டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்னையளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா ! 8

பலன் வழி :

செவ்வாய்—வியாழன், அஷ்டமி ஆகிய தினங்களில் காலையில் படிக்க நற்பலன் விளையும். நோய்கள் தீர அன்றாடம் ஐந்து தடவையும் குடும்பத் துன்பங்கள் தீர காலையிலும், மாலையிலுமாக எண்பத்தொரு நாட்களும் தொடர்ந்து படித்துவர அன்னை அருள் கூடும். கோவில்களில் விளங்கும் ஸ்ரீ துர்க்கா சந்நிதியில் ராகுகாலத்தில் பாடிவரின் கிரக பீடையும் துன்பமும் தீரும். செவ்வாய்க் கிழமை தீபத்தின் முன்பு ஆசாரசீலராயிருந்து படிக்கும் கன்னிகைகளுக்கு விவாக பிராப்தியும் ஏற்படும்.

—ஜெய துர்க்கா

''துர்க்கைச் சித்தர்''

## திருக்குறள்

''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீநிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்லாய் எனதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

ம்லையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்,
பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாம்இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல் லாம்,
தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர்சக்தி,
ஓம்சக்தி, ஓம் சக்தி, ஓம். 1

"நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப் பாள்;
அல்லது நீங்கும்" என் றேயுல கேழும்
அறைந்திடு வாய் முரசே
சொல்லத் தகுந்த பொருளன்று காண்இங்கு
சொல்லு மவர் தமையே.
அல்லல் கெடுத்த ரர்க்கிணை யாக்கிடும்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம். 2

நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பி விட்டோம்
கும்பிட்டெந் நேரமும் "சக்தி" யென்றா லுனைக்
கும்பிடு வேன், மனமே
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாத படி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம், 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்த்திடு
போற்றி உனக்கிசைத் தோம்:
அன்னை பராசக்தி என்றுரைத் தோம்: தளை
அத்தனை யுங்களைந் தோம்;
சொன்ன படிக்கு நடந்திடு வாய்,மன
மேதொழில் வேறில்லை, காண்;
இன்னு மிதேயுரைப் போம், சக்தி, ஓம்சக்தி,
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம். 4

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாகி விளங்கிடு வாய்
தெள்ளு கலைத்தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடு வேன்
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
இராதென்றன் நாவினிலே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முருகா சரணம்

வேலவனே வேலவனே வேலவனே வேல்முருகா
வெற்றிவடி வேலவனே பாலகனே வேல்முருகா
வேலைக்கையில் ஏந்தியாடும் வேலவனே வேல்முருகா
வினைகளெல்லாம் போக்கிவிடும் பாலகனே வேல்முருகா

பச்சைமயில் வாகனனே பாலகனே வேல்முருகா
அச்சந்தீர்த்து எமையாளும் ஆண்டவனே வேல்முருகா
கண்ணிரண்டும் உன்வடிவே காணவேண்டும் வேல்முருகா
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும் வேல்முருகா.

* * * *

குன்றிலாடும் குமரனுக்குக் கோடி கும்பிடு
குழந்தைவடி வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு
கந்தசாமிக் கடவுளுக்குக் கோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு.

அம்பிகையின் பாலனுக்குக் கோடி கும்பிடு
ஆறுமுக வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு
வள்ளி மணாளனுக்குக் கோடி கும்பிடு
வடிவேல் முருகனுக்குக் கோடிகோடி கும்பிடு
சரவணத்து ஐயனுக்குக் கோடி கும்பிடு
சண்முக வேலனுக்குக் கோடிகோடி கும்பிடு.

* * * *

குன்றத்தில் குடியிருக்கும் தெய்வம்எங்கள் தெய்வம்
குறவள்ளி தனைமணந்த தெய்வம்எங்கள் தெய்வம்
சங்கரனின் மகனான சண்முகனாம் தெய்வம்
ஐங்கரனோ டுடன்பிறந்த ஆனந்தத் தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைக்கு உபதேசம் தந்ததமிழ்த் தெய்வம்
தாருகா சுரனைவென்ற தனியான தெய்வம்
ஓங்காரப் பிரணவத்தில் உள்நின்ற தெய்வம்
உமையவளின் உரிமைகொண்ட உன்னதத் தெய்வம்

தமிழ்வளர்க்கும் இதயத்தில் தான்வளருந் தெய்வம்
அமிழ்தினும் இனியசொல்லால் முருகனென்ற தெய்வம்
சொல்லுக்குப் பொருள்கூறிச் சுவைதந்த தெய்வம்
சொல்லாகிப் பொருளாகிச் சுவையான தெய்வம்.

ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுகத் தெய்வம்
வேறுபடை தேவையற்ற வேலவனாம் தெய்வம்
யாருமற்ற அடியவரை ஆட்கொள்ளும் தெய்வம்
கூறும்வேதப் பொருளாய்க் குளிர்ந்துநின்ற தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாலட்சுமியைத் துதிப்போம்

உண்மையென் றுணர்ந்தநெஞ்சில் ஓடிவந்து நிற்பவள்
நன்மைசெய்ப வர்களுக்கு ஞானதீபம் ஆனவள்
மென்மையான பண்பினோடு மேவும்அன்புக் காவியம்
பன்மைஒன்றும் பாங்கில்வந்த பாரின்அன்னை வாழ்கவே.

சொல்லடங்கி நின்றபோதில் தூய்மைதோற்றம் கொண்டவள்
பல்லுயிருக்குள் ஊறிநிற்கும் பாசமென்னும் தேசவள்
அல்லலுற்று அழைப்பவர்க்கே ஐயம்நீக்கு கின்றவள்
வல்லமைக்கோர்எல்லைஎன்னும்மாண்பின்அன்னைவாழ்கவே

சோதனைகள் நூறுகோடி சூழவந்த போதினும்
நீதிஉண்மை தன்னில்ஒன்றி நின்றிருக்கும் திண்மையில்
ஜோதியாகத் தோற்றங்கொண்டு தோள்வலிக்குள் வாழ்பவள்
காதணிந்த சக்கரத்தின் கற்பின்அன்னை வாழ்கவே.

அர கரோ கரா — தாயே
அர கரோ கரா — தாயே
அன்னை துர்க்கை அம்பிகையே — அரகரோகரா
எம்மையாளும் ஈஸ்வரியே — அரகரோகரா
என்றும்இன்ப மானவளே — அரகரோகரா
அன்பர்களின் இரட்சகியே — அரகரோகரா
அவலவினை தீர்ப்பவளே — அரகரோகரா
தெல்லிநகர்ச் செல்வதியே — அரகரோகரா
தீனர்களின் தயாபரியே — அரகரோகரா
சங்கு சக்கர நாயகியே — அரகரோகரா
எங்கள் அன்ன பூரணியே — அரகரோகரா
அரகரோகரா அரகரோகரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிநகர் உழுகுடைப்பதி துர்க்காதேவி பதிகம்

அருளோங்கு மானந்த வல்லிநா லெண்வகை
அறங்களை வளர்த்தசெல்வி
அயனாதி முப்பத்து முக்கோடி தேவர்நித
மடிபரவு மிறைவிபோதப்
பொருளோங்கு முயர்தவத் தோரருங் கதியைப்
பொருந்தவழி காட்டுமனையே
பொருளிலேன் றாய்தந்தை தமருதவி தானிலேன்
புவியிலொரு சுகமுமில்லேன்
மருளோங்கி நிறைமனத் தேனிகம் பரமான
வாழ்வினுந் தாழ்வுறுவனோ
வந்துவந் தேபோன வாழ்வினால் நொந்துளம்
வாடுமென் முகநோக்கியே
தெருளோங்கு முயர்கல்வி செல்வமுந் தந்துதுயர்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே.

அந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
அமரிசங் காரிகௌரி
ஆறட் சரத்தியுர. நேமிக் கரத்திவலி
யாரம் பணத்திநிகரில்
சுந்தரி நிறைந்தபர மானந்தி நித்தியச்
சுகசோ பனத்திவாய்ந்த
சூலியெண் டோளியயி ராணிமுத லானவுயர்
சூரரம் பையரிறைவியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைநீ தாயுநீ தமருநீ கனமிக்க
சகலபாக் கியமும்நீயே
தாரணியி லுனையன்றி வேறுதுணை யிலையெனது
சஞ்சல மெலாநீக்கியே
சிந்தைமகிழ நீடவரு பந்தமரு ளோடவுறு
தீவினைகள் வாடவருவாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே.

மாருதப் பிரவல்லி திசையுக்கிர சோழனருள்
மகளுற்ற குன்மவலியும்
மாமுகமு நீக்கியவர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டுலகி னிற்கொடிய மிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண்டாசகல்விழாப்பவனி
பேசுமயில் மீதுவந்து
ஆருமயல் தீரவருள் விளையாடல் செய்தவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்த்துப சரித்திடவு மடியருறு
மாகுல மகற்றி மேலாஞ்
சீருமுயர் கல்வி ஞானம்பே றளிக்கவுந்
திருவுளங் கொண்டெழிலுறுந்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மகிடாசுர மர்த்தினி ஸ்தோத்திரம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாசினி
விஷ்ணு விலாசினி ஜிஷ்ணு நுதே
பகவதி ஹேசினி கண்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக் குதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்த்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

சுரவர வர்சிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்சிணி கர்சரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ நிரோஷிணி திதிசுத ரோஷிணி
துர்மத சோஷிணி சிந்து ரதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்த்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

அயிஜக தம்ப மதம்ப சுதம்பவன
ப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிாலய
ஜிருங்க நிஜாலய மத்யகதே
மதுமது ரேமது கைட பகஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராசரதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்த்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமல தலாமல கொமல காந்தி
கலாக விதாமல பாலலதே
சகல விலாச கலாநில யக்ரம
கேலி சலத்கல கம்சகுலே
அலிகுல சம்குல குவலய மண்டல
மௌலி மிலத்பகு லாலிகுலே
ஜய ஜய ஹே மகிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைல சுதே.

கனகல சத்கல ஹிந்து ஜலைரனு
ஸிஞ்சிநு தேகுண ரங்கபுவம்
பஜதி ஜகிம்ந சசீகுச கும்ப
தடீபர ரம்ப சுகாநுபவம்
தவசர ணம்சர ணம்கர வாணி
நதாமர வாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மகிஷாசுர மர்தினி
ரம்யக பர்தினி சைவ சுதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா—ஓம் ஸ்ரீ ஜெய...

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய (மறைய) அம்மம்மா
தேவையெல்லாம் அடைய (மறைய)
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை — ஓம் ஸ்ரீ ஜெய...

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வரமருள்வாய் அம்மம்மா
ஈசுவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் — ஓம் ஸ்ரீ ஜெய...

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ வழிகாட் டிடுவாய்
ரக்ஷிதேவியுன் அடைக்கலமே—ஓம் ஸ்ரீ ஜெய...

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா — ஓம் ஸ்ரீ ஜெய ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலிதா நவரத்னமாலை

## காப்பு

ஆக்கும் தொழில்ஐந் தரனாற் றநலம்
பூக்கும் நகையாள் புவனேச் வரிபால்
சேர்க்கும் நவரத் தினமா லையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே.

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெரியார் நினையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வையிரப்
பகைவர்க் கெம னாக எடுத்தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்து

முத்தே வரும்முத் தொழிலாற் றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா சினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக் கிணைவாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம்பவ ளம்பொழி பாரோ
தேம்பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை யிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணு பவர்க்கருள் எண்ண மிகுத்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானாள்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாப் பொலியா னவளே
பூணக் கிடையாப் பொலியா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும்நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
ச்ருதி ஜதிலயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெறஅரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விலாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவீ சந்த்ரக லாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸ்வரூபிணி நித்திய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைடூரியம்

வலையொத் தவினை கலையொத் தமனம்
மருளப் பறையா றொலியொத் தவிதரல்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடு ரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## பயன்

எவர்எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின் றிடுவார்
அவர்அற் புதசக்தி எல்லாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே.

*　　*　　*

ஜெய சிவரமணீ குருகுஹ ஜனனீ —
ஜெய மனவனஹாரிணீ
ஜெயஓம் ஸ்ரீமாதா — மாதா — ஜெய ஜெய
ஜெகன்மாதா
மாதா ஜெய ஓம் ஸ்ரீமாதா — மாதா ஜெய
ஜெய ஜெகன்மாதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

## சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்.

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி.

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே சேண்மையாய் ரக்ஷி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுளே விளங்கும் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் கிற்சிவைக்கு மங்களம்.

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும்என் வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்தலைந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க் கனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும்ஓங்க என் கரத் தியற்கையான சித்தியைத்
தந்துஞான மூர்த்தியாய்த் தனித்துவைத்த சக்தியாம்
நாமகீர்த் தனம்பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம்பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞானதீப மேற்றியென்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம்கொண் டாடுவோம்.

நம பார் வதீ பதயே
அர ஹர மகா தேவா
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

## மந்திரம்

ஓம் திரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்தனம்
உர்வாருக மிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

சுத்த சத்துவ குணம் பொருத்தியவரும் ஆன்ம ஒளியை வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைத் தியானிப்போமாக.

காம்பிலிருந்து வெள்ளரிப்பழம் தானே விடுபடுவதுபோல பிறப்பு இறப்பு என்ற பந்தத்திலிருந்து உமதருளால் விடுபடுவோமாக. பேரின்பப் பாதையிலிருந்து விலகாதிருப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளுரை


மனமே! இடைவிடாமல் இறைவனையே நினைந்து போற்றி ஏற்றி வா. ''எறும்பு ஊரக் கல்லும் தேய்ந்து போகும்'' என்ற பழமொழிப்படி மனமாகிய கல்லும் இடைவிடாத பிரார்த்தனையினால் கரைந்து போகும். நல்ல எண்ணத்தையே சதா நினைப்பவனுடைய உள்ளத்திலே நல்லவைகளே பதியும். அதனால் அவன் மக்களில் நல்லவனாகவும் கீர்த்தியுடையவனாகவும் வாழ்வான். இறைவனுடைய நாம ஜெபத்தை நாத் தழும்பேற ஜெபிக்க வேண்டும். பொய் சொல்லாதவனுடைய நாவினால் ஜெபிக்கப்படும் மந்திரங்கள் உடனடியாகச் சித்தியைக் கொடுக்கும் பொய்யனாக்குவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவை அசுர சக்திகளாகும். ஆனால் அவை மத்தியில் ஏமாந்து போகக்கூடாது. இறைவனையே கும்பிடு! நம்பு! துயரங்கள் அனைத்தும் நொடிப்பொழுதில் அகன்றுவிடும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1496 1051



திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org